"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 9

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

# பகுதி – 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
   1. நளவெண்பா
   2. சிலப்பதிகாரம்
   3. மகாபாரதம்

2. முல்லை நிலத்திற்குரிய சிறப்பான இசைக்கருவியாகக் கருதப்பெற்றது
   1. முரசு
   2. யாழ்
   3. புல்லாங்குழல்

3. கோலமயில் தோகை விரித்து ஆடியது. இதில் கோலம் என்பது
   1. அழகு
   2. தோகை
   3. வடிவம்

4. ‘அச்சம் தவிர்’ என்று பாரதியார் கூறினார். இவ்வாக்கியம்
   1. கூட்டுவாக்கியம்
   2. கலப்புவாக்கியம்
   3. கூட்டுக்கலப்புவாக்கியம்

5. முதுமைப்பருவம் பிறர் உதவியை வேண்டிநிற்கும் பருவமாகும். இதில் முதுமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. வயோதிபம்
   2. இளமை
   3. முதிர்வு

6. ‘அறிவைத் திறப்பதற்கான திறவுகோல் மன ஒருமைப்பாடாகும்’ எனக் கூறியவர்
   1. ஆறுமுகநாவலர்
   2. விபுலானந்தர்
   3. விவேகானந்தர்

7. நாயகனுக்கு நாயகி போல நிபுணனுக்கு
   1. நிபுணி
   2. நிபுணள்
   3. நிபுணை

8. உயிர்றொடர்க் குற்றியலுகரப்புணர்ச்சி பெற்றுவந்த சொல்
   1. வண்டினம்
   2. அழகுடன்
   3. பட்டாடை

9. ஐம்பதாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்பெறுவது
   1. வைரவிழா
   2. பொன்விழா
   3. வெள்ளிவிழா

10. இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள தீவு
    1. கியூபா
    2. ஈழம்
    3. அயர்லாந்து

1 2 3

11. போக்குவரத்துப் பொறிகளினால் சூழல் மாசடைகிறது. இதில் போக்குவரத்து என்பது
    1. இணைமொழி
    2. இரட்டைமொழி
    3. அடுக்குமொழி

12. யாழ்ப்பாண அரசின் தலைநகராக விளங்கியது
    1. அநுராதபுரம்
    2. பொலநறுவை
    3. நல்லூர்

13. ஐக்கியநாடுகள் சபையின் முன்றலில் பன்னாட்டுக் கொடிகள் அசைந்து ஆடுகின்றன. இதில் வந்துள்ள வினையடை
    1. முன்றலில்
    2. ஆடுகின்றன
    3. அசைந்து

14. வகுப்பிலுள்ள மாணவர்களுள் பாலன் நல்லவன். இதில் நல்லவன் என்பது
    1. தெரிநிலைவினைப்பகாப்பதம்
    2. தெரிநிலைவினைப்பகுபதம்
    3. குறிப்புவினைப்பகுபதம்

15. விளிவேற்றுமை ஏற்காத சொல்
    1. மாணவன்
    2. நண்பன்
    3. நான்

16. பனையின் இளையது வடலி போல தென்னையின் இளையது
    1. குட்டி
    2. பிள்ளை
    3. நாற்று

17. 'காவில், கோவில், களனிகள் எங்கும் காதல் தோயும் பாட்டு...' இதில் கா என்பது
    1. மலை
    2. வயல்
    3. சோலை

18. குழந்தையின் கண்களிலிருந்து முத்துப்போல கண்ணீர்த்துளிகள் சிந்தின. இதில் வந்துள்ள உவமானம்
    1. கண்கள்
    2. முத்து
    3. கண்ணீர்

19. எதனையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும் என்பதை விளக்கும் பழமொழி
    1. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்
    2. இலையும் பழுப்பும் எங்கும் உண்டு
    3. ஆழம் அறியாது காலை விடாதே

20. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து
    1. ஆ
    2. ஓ
    3. ஏ

1 2 3

21. சிறுவர்கள் நடனம் ஆடி மகிழ்ந்தார்கள். இதில் ஆடி மகிழ்ந்தார்கள் என்பது
    1. வினைமுற்றுத்தொடர்
    2. வினையெச்சத்தொடர்
    3. பெயரெச்சத்தொடர்

22. காலநிலை சார்ந்த விழாக்களுள் ஒன்று
    1. நவராத்திரி
    2. தைப்பொங்கல்
    3. நத்தார்

23. 'தேடிச் சோறு நிதந் தின்று...' என்ற பாடலைப் பாடியவர்
    1. ஔவையார்
    2. பாரதியார்
    3. பாரதிதாசன்

24. அவன் கூலி வேலை செய்தான். இதில் கூலி வேலை என்பது
    1. 2ஆம் வேற்றுமைத்தொகை
    2. 5ஆம் வேற்றுமைத்தொகை
    3. 4ஆம் வேற்றுமைத்தொகை

25. சங்கு சுட்டாலும் வெண்மை தரும். வெண்மை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. தண்மை
    2. கருமை
    3. ஒளி

(25×1=25 புள்ளிகள்)

## 2. சேர்த்தெழுதுக.

1. கடல் + நீர் = ______________________
2. மணி + ஆரம் = ______________________
3. மின் + அஞ்சல் = ______________________
4. வாள் + படை = ______________________
5. செம்மை + கமலம் = ______________________
6. மேடு + நிலம் = ______________________

(6×1=6 புள்ளிகள்)

## 3. பிரித்தெழுதுக.

1. அடியிணை = ________________ + ________________
2. வடதிசை = ________________ + ________________
3. ஊர்க்குருவி = ________________ + ________________
4. செய்ந்நன்றி = ________________ + ________________
5. மட்குடம் = ________________ + ________________
6. தாயன்பு = ________________ + ________________

(6×1=6 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. அழகோ அழகு…
2. அறிவால் உலகை வெல்வோம்...

(3 புள்ளிகள்)

**5. பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் எழுதுக.**

1. நாடு:

   பெயர்:

   வினை:

2. படி:

   பெயர்:

   வினை:

(4×½=2 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. புதிய எழுத்துரு வடிவிலான தொடர்பாடல் வகைகள் இரண்டு தருக. (1 புள்ளி)

2. பண்டைத் தமிழர் ஆடற்கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றாக விளங்கும் காப்பியம் எது? (1 புள்ளி)

3. மனித விழுமியப் பண்புகள் மூன்று தருக. (1 புள்ளி)

4. வாக்கியம் என்றால் என்ன? கருத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்கியங்களை வகைப்படுத்துக. (2 புள்ளிகள்)

5. வேற்றுமை என்றால் என்ன? ஆறாம் வேற்றுமையின் உருபையும் பொருளையும் தருக. (1 புள்ளி)

6. தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? வினைத்தொகை, உம்மைத்தொகை இரண்டிற்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக. (1½ புள்ளிகள்)

7. பகுபத உறுப்புகள் ஆறினையும் எடுத்துக்காட்டுடன் தருக. (1½ புள்ளிகள்)

8. ‘வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்’ இக்குறளின் பொருளினைத் தருக. (1 புள்ளி)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? (1 புள்ளி)

2. பெண்களுக்கு இயல்பாக அமைந்துள்ள நாற்குணங்களும் எவை? (1 புள்ளி)

3. நல்ல அமைச்சாக கருதப்பெறுபவை எவை? (1 புள்ளி)

4. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.
   1. எதுகையணி ______________________
   2. மோனையணி ______________________

(2×½= 1புள்ளி)

5. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக. (1 புள்ளி)

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. புறநானூறு
2. சூழலைப்பேணி சுகமாய் வாழ்வோம்
3. தமிழர் வாழ்வில் பண்பாட்டு விழாக்கள்

(8 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

இன்றைய சமூகத்தில் கல்வி மிகவும் முக்கிய பங்காற்றுகின்றது. ஒரு சமூக வளர்ச்சியினை அக்கல்வியின் வளர்ச்சியின் மூலமே கண்டுகொள்ளலாம். சமூகத்தில் பல்வேறு வீழ்ச்சியினைக் காணக்கூடியதாக இருக்குமென்றால் அதற்குக் காரணம் கல்வியின் வீழ்ச்சியே என்றாலும் அது மிகையாகாது. கல்வியைப்பற்றிப் பல்வேறு நூல்கள் பல்வேறு விதமாகப் போற்றிப் புகழ்கின்றன. எடுத்துக்காட்டாக நாலடியாரில் 'குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல…' என்று கூறுவதன் மூலம் கல்வியின் அழகே உண்மையான அழகு என்பதைப் புரிந்து கொள்ளலாம். மனிதன் எதிர்காலத்தில் சிறந்த தொழில் பெறுவதற்கும் தனது தகைமைகளை வளர்த்துக் கொண்டு சமூகத்தில் உயர்நிலை அடைவதற்கும் அச்சமூகத்தில் நற்பெயரைப் பெறுவதற்கும் கல்வி முக்கிய இடம் வகிக்கின்றது. எனவே மேற்கூறிய விடயங்களை நிரந்தரப்படுத்திக் கொள்வதற்கு கல்வி மிகவும் அவசியப்படுகின்றது. ஒரு சமுதாயத்தில் ஒவ்வொருவரும் கல்வியறிவினை பெற்றுக் கொள்வதன் மூலமே சிறந்த மனிதனாக வாழலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

(4 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகிலுள்ள ஒவ்வொரு மொழியிலும் முதலில் தோன்றிய இலக்கியமாக நாட்டார் இலக்கியமே விளங்குகின்றது. அதில் பாடல்களுடன் கதைகள், நொடிகள், பழமொழிகள், மரபுத்தொடர்கள் முதலானவைகளும் அடங்கும். ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்தும் இயல்பாகவே ஊற்றெடுக்கும் உணர்ச்சிகளை அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப பாடலாக வடித்தனர். இவையே நாட்டார் பாடல்களாகத் தோற்றம் பெற்றன. இப்பாடல்களை கிராமியப்பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள், பாமரப் பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள், நாடோடிப்பாடல்கள் எனப் பல பெயர்களால் அழைக்கலாம். இப்பாடல்களில் இசையும் உணர்ச்சியுமே முக்கியமாகும். படித்தவர்கள், பாமரர்கள் என்ற வேறுபாடின்றி பாடிய பாடல்கள் இவையாகும். மனிதரின் பிறப்பு முதல் இறப்பு வரையான செயற்பாடுகளே இவற்றின் பாடுபொருளாக அமைகின்றன. கிராமப்புற மக்களிடையே தொன்று தொட்டுக் காணப்பெறும் நம்பிக்கைகள், மருத்துவ முறைகள், பல்வேறு வகையான தொழில் முயற்சிகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டார்பாடல்கள் எழுந்தன. அருவிவெட்டுப்பாடல், மீனவர்பாடல், உழவுப்பாடல், காதற்பாடல், தாலாட்டுப்பாடல், ஒப்பாரிப்பாடல், மருத்துவிச்சிப்பாடல் எனப் பல்வேறு வகைகளில் நாட்டார்பாடல்கள் காணப்பெறுகின்றன. இவை பெருமளவு பிரதேச நடைமுறைகளைச் சார்ந்திருக்கின்றன. வேலை செய்யும் போது ஏற்படும் களைப்பைப் போக்கவும், உற்சாகத்தை ஏற்படுத்தவும் இவை உதவுகின்றன. இப்பாடல்களில் பேச்சு மொழியானது உயிரோட்டத்துடன் இணைந்து ஓசை ஒழுங்குடன் உணர்வை வெளிக்காட்டும் உத்தி உள்ளடங்கியதாகக் காணப்பெறுகின்றது. நாட்டார்பாடல்கள் பற்றிய ஆய்வு முயற்சிகளும் தேடல்கள் மூலமான சேகரிப்புகளும் தற்போது வேகம் பெற்றுள்ளன.

1. ஒவ்வொரு மொழியிலும் முதலில் தோன்றிய இலக்கியமாக விளங்குவது எது? (1 புள்ளி)

_______________________________________________

2. நாட்டார் இலக்கியத்துள் அடங்குவன எவை? (1 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

3. நாட்டார்பாடல்கள் எவ்வாறு தோற்றம் பெற்றன? (1 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

4. இப்பாடல்களிற்கு முக்கியமாக இருக்கவேண்டிய அம்சங்கள் எவை? (1 புள்ளி)

_______________________________________________

5. இப்பாடல்களுக்குப் பாடுபொருளாக எவை அமைகின்றன? (1 புள்ளி)

_______________________________________________

6. இப்பாடல்களில் பேச்சுமொழி எவ்வாறு காணப்பெறுகின்றது? (2 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

**3.** **கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியினைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.** (4 புள்ளிகள்)

**Deutsch**

Mehrsprachige Kompetenz ist, wenn man in mehreren Sprachen Wissenskompetenzen hat. Es gibt viele Vorteile, wenn Jeder neben seiner Muttersprache auch in anderen Sprachen Kenntnis hat. Durch das Sprechen, Schreiben und Lesen in verschiedenen Sprachen kann ein besseres Verständnis zwischen den Menschen aufgebaut werden. In Bereichen wie Industrie, Informationstechnologie, Journalismus, Bankwesen und Schulwesen gibt es für mehrsprachige Leute viele Erfolgsmöglichkeiten. Man kann sagen, dass die Mehrsprachigkeit eine Wissensausbreitung erzeugt. Deshalb ist es wichtig, dass Jeder mehrsprachliche Kompetenzen aneignet.

**Français**

Le plurilinguisme signifie avoir des connaissances de plusieurs langues. La maîtrise de sa langue maternelle ainsi que d'autres langues peuvent apporter à chacun plusieurs avantages. Pouvoir parler et écrire dans plusieurs langues permet aux personnes de mieux communiquer entre eux et de se comprendre. Pour les personnes qui travaillent et qui sont dans les domaines de l’informatique, du journalisme, de la banque et le domaine éducatif, le fait d’avoir des compétences dans plusieurs langues leur permet d’évoluer professionnellement. Être compétent dans plusieurs langues est source de développement et enrichissement personnel. Ainsi, il est important que chacun bénéficie de compétences plurilingues.

**Italiano**

Il pluralismo è avere conoscenza completa di varie lingue. Oltre alla propria lingua madre, l’apprendimento di un’altra lingua comporta numerosi vantaggi. Saper parlare e scrivere in più lingue, aiuta ad avere una maggiore comprensione reciproca tra varie persone. Le persone che lavorano indipendentemente, nel settore informatico, mediatico, banchiere ed educativo, se hanno una sapienza plurilinguistica hanno più possibilità di fare carriera (progredire). La conoscenza di varie lingue arricchisce la personalità e l'intelligenza di una persona. Pervia di questi motivi torna utile possedere una conoscenza plurilinguistica.

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |